**விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பாக கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து ஆய்வுக்கூட்டம் கண்காணிப்பு அலுவலர்/போக்குவரத்துத்துறை அரசு செயலாளர் திரு.C.சமயமூர்த்தி இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பாக கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து ஆய்வுக்கூட்டம் கண்காணிப்பு அலுவலர்/போக்குவரத்துத்துறை அரசு செயலாளர் திரு.C.சமயமூர்த்தி இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (20.05.2021) நடைபெற்றது.

இந்த ஆய்வுக்கூட்டத்தில கண்காணிப்பு அலுவலர்/போக்குவரத்துத்துறை அரசு செயலாளர் திரு.C.சமயமூர்த்தி இ.ஆ.ப., அவர்கள் விரிவாக ஆய்வு மேற்கொண்டனர் :-

இந்த ஆய்வுக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் விழுப்புரம் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் கொரோனா நோய் தடுப்பு பணிகள் குறித்தும், மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை செயல்பாடுகள் குறித்து கண்காணிப்பு அலுவலர்/போக்குவரத்துத்துறை அரசு செயலாளர் திரு.C.சமயமூர்த்தி இ.ஆ.ப., அவர்களுக்கு விரிவாக எடுத்துரைத்தார்.

மேலும் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் அவர்களிடம் விழுப்புரம் மாவட்டத்தில் தற்போது வரை நோய் பாதிக்கப்பட்டவர்களின் விவரம், குணமடைந்தவர்களின் விவரம், உயிரிழந்தவர்களின் விவரம். சிகிச்சைப்பெற்று வருபவர்களின் விவரம், கொரோனா தடுப்பூசி செலுத்திக்கொண்டவர்களின் விவரம், தடுப்பூசி கையிருப்பின் விவரம், மருத்துவமனைகளில் ஆக்சிஜன் படுக்கை வசதி விவரம், ஆக்சிஜன் கையிருப்பு மற்றும் ஆக்சிஜன் அளவை கண்டறியும் கருவி **(Pulse Oximeter)** உள்ளிட விவரம் குறித்து கண்காணிப்பு அலுவலர்/போக்குவரத்துத்துறை அரசு செயலாளர் திரு.C.சமயமூர்த்தி இ.ஆ.ப., அவர்கள் விரிவாக கேட்டறிந்தார்.

மேலும் மாவட்ட காவல் கண்காணிப்பு அலுவலரிடம் காவல்துறை சார்பாக ஊரடங்கு காலங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் பாதுகாப்பு நடவடிக்கைகள், தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் கண்காணிப்பு பணிகள், முகக்கவசம் அணியாதவர்கள் மீது செலுத்தப்பட்ட அபராதம் விவரம் மற்றும் காவல்துறையினரால் கொரோனா நோய் தடுப்பு விழிப்புணர்வு மேற்கொள்ளப்பட்ட விவரம் உள்ளிடவற்றை கண்காணிப்பு அலுவலர்/போக்குவரத்துத்துறை அரசு செயலாளர் திரு.C.சமயமூர்த்தி இ.ஆ.ப., அவர்கள் விரிவாக கேட்டறிந்தனர்.

தொடர்ந்து மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் அவர்களிடம் ஊரகப்பகுதிகளில் நோய் தொற்று பாதிக்கப்பட்ட பகுதிகளில் தடுப்புகட்டைகள் ஏற்படுத்தி தூய்மைப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் பாதுகாப்பு நடவடிக்கைகள், நோய் தொற்று பாதிக்கப்பட்ட கொரோனா பரிசோதனை முகாம்கள் அமைத்தல் விவரம், தூய்மைப்பணியாளர்கள் மூலம் நோய் தொற்று பாதிக்கப்பட்ட பகுதிகளில் கொரோனா நோய் தடுப்பு விழிப்புணர்வு மேற்கொள்ளப்பட்ட விவரத்தினை விரிவாக கண்காணிப்பு அலுவலர்/போக்குவரத்துத்துறை அரசு செயலாளர் திரு.C.சமயமூர்த்தி இ.ஆ.ப., அவர்கள் கேட்டறிந்தார்.

தொடர்ந்து துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள் அவர்களிடம் விழுப்புரம் மாவட்டத்தில் ஆரம்ப சுகாதார நிலையங்களின் செயல்பாடுகள், கொரோனா சிகிச்சை அளிக்கப்படும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் விவரம், கொரோனா பரிசோதனை மேற்கொள்ளும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் விவரம், ஆரம்ப சுகாதார நிலையங்களில் கொரோனா தடுப்பூசிகள் கையிருப்பு, மருத்துவ உபகரணங்கள் உள்ளிட்டவற்றை கண்காணிப்பு அலுவலர்/போக்குவரத்துத்துறை அரசு செயலாளர் திரு.C.சமயமூர்த்தி இ.ஆ.ப., அவர்கள் விரிவாக கேட்டறிந்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அறிவுறுத்தலின்படி கொரோனா வைரஸ் நோய் தொற்றிலிருந்து பொதுமக்களை காத்திடும் வகையில் தமிழக அரசு பல்வேறு நோய் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறது. அதன்படி விழுப்புரம் மாவட்டத்திலுள்ள வருவாய்த்துறை, ஊரக வளர்ச்சித்துறை, சுகாதாரத்துறை, காவல்துறை, தீயணைப்புத்துறை, வேளாண்மைத்துறை உள்பட பல்வேறு துறைகளைச் சார்ந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் தங்கள் பகுதிகளில் பொதுமக்கள் கொரோனா தடுப்பூசியின் பாதுகாப்புத் தன்மையினை விரிவாக எடுத்துரைத்து தடுப்பூசி செலுத்திக்கொள்ள விழிப்புணர்வு ஏற்படுத்திட வேண்டும். மேலும் பொதுமக்கள் தங்களுக்கு தொடர் காய்ச்சல், சளி, இருமல், மற்றும் உடற்சோர்வு போன்ற அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக கொரோனா பரிசோதனை மேற்கொண்டு பரிசோதனை முடிவுகள் வரும் தங்களை தாங்களே தனிமைப்படுத்திக்கொள்ள விழிப்புணர்வு ஏற்படுத்திட வேண்டும். மேலும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பாக நோய் தொற்று பாதிக்கப்பட்ட இடங்களில் உடனடியாக கொரோனா பரிசோதனை முகாம்கள் அமைத்து அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் அனைவருக்கும் கொரோனா பரிசோதனை மேற்கொள்ள வேண்டும். மேலும் அதிக்கப்படியான பொதுமக்கள் வசிக்கும் பகுதிகளில் கொரோனா பரிசோதனை முகாம்களை ஏற்படுத்திட வேண்டும். மேலும் பொதுமக்கள் மூச்சுவிடுவதில் சிரமம் ஏதேனுமிருப்பின் தங்களை தாங்களாகவே ஆக்சிஜன் அளவை கண்டறியும் கருவி வாயிலாக **(Pulse Oximeter)** சுயபரிசோதனை செய்துகொள்ள வேண்டும். சுகாதாரத்துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் **(Pulse Oximeter)** கருவியினை பொதுமக்கள் அனைவரும் தங்கள் வீடுகளில் பயன்படுத்த விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

மாவட்ட நிர்வாகம் சார்பாக கொரோனா நோய் தொற்று பாதிக்கப்பட்ட பகுதிகளை தனிமைப்படுத்தி அப்பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களுக்கு தேவையான அத்தியாவசியப்பொருட்களை நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சி பணியாளர்கள் வாயிலாக வீடு, வீடாக சென்று வழங்கிட வேண்டும். மேலும் விழுப்புரம் மாவட்டத்தில் கொரோனா நோய் தடுப்பு பணிகளில் ஈடுபடும் அரசு அலுவலர்கள், பணியாளர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் தூய்மை பணியாளர்கள் ஆகியோர் பாதுகாப்பான முறையில் கொரோனா தடுப்பு பணிகளில் ஈடுபட வேண்டும் என கண்காணிப்பு அலுவலர்/போக்குவரத்துத்துறை அரசு செயலாளர் திரு.C.சமயமூர்த்தி இ.ஆ.ப., அவர்கள் அறிவுறுத்தினர்.

தொடர்ந்து விழுப்புரம் நகராட்சிக்குட்பட்ட காமராஜர் வீதியில் கொரோனா வைரஸ் பாதிக்கப்பட்டு தடைசெய்யப்பட்ட பகுதிகள், பெரும்பாக்கத்தில் உள்ள அரசு சட்டக்கல்லூரி மாணவியர் விடுதியில் கொரோனா வைரஸ் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சைகள் குறித்தும் மற்றும் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் விரிவாக்கம் செய்யப்பட்ட கொரோனா சிகிச்சைப் பிரிவினையும் பிரிவினை கண்காணிப்பு அலுவலர்/போக்குவரத்துத்துறை அரசு செயலாளர் திரு.C.சமயமூர்த்தி இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.எஸ்.ராதாகிருஷ்ணன், கூடுதல் ஆட்சியர்(வருவாய்) திருமதி.ஸ்ரேயா.பி.சிங் இ.ஆ.ப., முன்டியம்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.குந்தவிதேவி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.பூ.காஞ்சனா, இணை இயக்குநர் (சுகாதார நலப்பணிகள்) மரு.சண்முகக்கனி, துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.செந்தில்குமார், அரசு மருத்துவர்கள், நகராட்சி ஆணையர்கள், பேரூராட்சி செயல்அலுவலர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், விழுப்புரம்.